(f) யாதொரு ஆதாரவு மகாராஜாவுடைய கவர்ன்மெண்டினாலாவது, கவர்ன்மெண்டுக்காகவாவது, [illegible] இந்த சட்டத்தின் 31-வது பிரிவின்படியாவது, [illegible] அந்த ஆதாரவு, டிவிஷன் பேஷ்காருடைய [illegible] கொடுத்தாலும் அந்த ஆதாரவை ஏற்றுக்கொள்வதற்கு இந்தப்பிரிவிலுள்ள எதுவும் தடையாகமாட்டாது.

38. யாதொரு ஆதாரவு, சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவோ, ரெஜிஸ்டர் செய்யப்படவோ [illegible] யிருக்கும் விஷயத்தில், அப்படி ஏற்றுக்கொண்டது, (3, 61 இவைகளில் [illegible] பிரிவில் சொல்லியிருக்கிறபடி தவிர, அந்த ஆதாரவுக்கு கிரமமாய் முத்திரை போட்டிருக்கவில்லையென்கிற ஹேதுவின்மேல், ஆக்ஷேபணைக்கு இடமாகமாட்டாது.

இணைப்பட்டதாக ஏற்றுக்கொண்டதை ஆட்சேபிக்கப்படாது.

39. ஒரு ஆதாரவு போதுமான தொகைக்கு முத்திரை போடப்படும் அம்முத்திரை கிரமப்படியான தன்மையதாயிருக்குமாயின், அதற்காக விதிக்கத் தக்க தீர்வை செலுத்தப்படுவதின்மேல் அது கிரமமாய் முத்திரை போடப்பட்டதாக அதைப்பற்றி உறுதிமொழி கூறலாமென்றும் அதன் பிறகு, அவ்வாறு உறுதிமொழி கூறப்பட்ட அந்த ஆதாரவு எழுதப்பட்ட தேதிமுதல் கிரமமாய் முத்திரை போடப்பட்டிருப்பதாக எண்ணப்படுமென்றும் மகாராஜாவுடைய அனுமதியுடன் திவான் விதிகள் செய்யலாம்.

கிரமமில்லாத முத்திரை போடப்பட்ட ஆதாரவுகளை ஏற்றுக்கொள்வது.

40. (1) யாதொரு ஆதாரவை 35-வது பிரிவின்படி மறியல் செய்கிறவருக்குச் சட்டப்படிக்காவது உபயகக்ஷிகளின் சம்மதியின் மேலாவது சாட்சியம் வாங்க அதிகாரமிருந்து, 37-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி அபராதம் அல்லது 39-வது பிரிவில் சொல்லியிருக்கிற தீர்வை செலுத்தப்படுவதன்மேல் அந்த ஆதாரவைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுவாராகில், அவர், அந்த ஆதாரவுக்கு உறுதிக் கையெழுத்து செய்யப்பட்ட நகலை அதைக்குறித்து வாங்கப்பட்ட தீர்வைத்தொகையையும் அபராதத்தையும் கண்டு எழுதி மூலமாய் சர்ட்டிபிகேட்டுடனே டிவிஷன் பேஷ்காருக்கு அனுப்பவேண்டியதுமல்லாமல் அந்தத்தொகையை டிவிஷன் பேஷ்காருக்காவது இதுவிஷயத்தில் அவர் நியமிக்கிற நபருக்காவது அனுப்பவும் வேண்டும்.

மறியல் செய்யப்பட்ட ஆதாரவுகளை இனனது செய்வது

(2) மற்றப் பிரதிவிஷயத்திலும், ஆதாரவை அப்படி மறியல் செய்கிறவர் அந்த அசலை டிவிஷன் பேஷ்காருக்கு அனுப்பவேண்டும்.

41. (1) யாதொரு ஆதாரவுக்கு நகல் 40-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி டிவிஷன் பேஷ்காருக்கு அனுப்பப்பட்டால் பேஷ்கார் இது விஷயத்தில் தனக்கு மனுசெய்யப்படுவதன்மேலாவது, மனுசெய்யப்படாவிட்டால் தன்னுடைய சம்மதத்தின்மேலாவது தனக்கு யுக்தமாகத் தோன்றுகிற பக்ஷத்தில் அப்படிப்பட்ட ஆதாரவைக்குறித்து செலுத்தியிருக்கிற அபராதம் முழுவதையுமோ அல்லது அதில் யாதொரு பாகத்தையுமோ வாபஸ் பண்ணலாம்.

40-வது பிரிவு (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செலுத்தப்பட்ட அபராதத்தை வாபஸ்பண்ண டிவிஷன் பேஷ்காருக்கு அதிகாரம்

42. (1) டிவிஷன் பேஷ்கார் 35-வது பிரிவின்படி யாதொரு ஆதாரவை மறியல் செய்தாவது 40-வது பிரிவு (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தனக்கு அனுப்பப்பட்டு, [illegible] ஆதாரவாக [illegible] அல்லது [illegible] யாதொரு ஆதாரவை [illegible] கொண்டாலும் பேஷ்கார் நடத்தவேண்டியதென்னவென்றால்.—

மறியல் செய்யப்பட்ட ஆதாரவுக்கு முத்திரை போட டிவிஷன் பேஷ்காருக்கு அதிகாரம்.

(a) அப்படிப்பட்ட ஆதாரவு கிரமமாய் முத்திரை போடப்பட்டிருக்கிறதென்றாவது தீர்வைக்குட்பட்டதல்லவென்றாவது பேஷ்கார் அபிப்பிராயப்பட்டால், சட்டத்துக்குத் தக்கபடி கிரமமாய் முத்திரை போடப்பட்டிருக்கிறதென்றாவது தீர்வைக்குட்பட்டதல்லவென்றாவது அதன்மேல் பேஷ்கார் எண்டார்ஸ்மெண்ட் எழுதி ஸர்டிபை பண்ணவேண்டும். பிறபாடு அந்த ஆதாரவை யாரு ஆஜராக்கினாரோ அந்த நபருக்கு கொடுக்கவோ அல்லது ஆபீஸிலிருந்து தன் கைக்கு வந்ததோ அந்த ஆபீசருக்கு, அவருக்கு யாருடைய ஸ்வாதீனத்திலிருந்து வந்ததோ அந்த நபருக்கு திரும்பக் கொடுக்கும்படியாக, திருப்பியனுப்பவோ செய்யவேண்டும்.

(b) அப்படிப்பட்ட ஆதாரவு தீர்வைக்குட்பட்டதாயிருக்கிறதென்றும் கிரமமாய் முத்திரை போடப்படவில்லையென்றும் பேஷ்கார் அபிப்பிராயப்பட்டால் பேஷ்கார் சரியான தீர்வையாவது அதை சரிப்படுத்தவேண்டிய தொகையாவது எதுவான தீர்வையுடனேயோ, சரிப்படுத்தவேண்டிய தொகையுடனேயோ இந்த தடவைக்கொத்த அபராதத்தொகையுடன் செலுத்தச் சொல்லவேண்டும்.

ஆனால், அப்படிப்பட்ட ஆதாரவானது 14 வது அல்லது 15-வது பிரிவுக்கு விரோதமாய் எழுதப்பட்டதனால் மாத்திரம் தப்பல் செய்யப்பட்டிருந்தால், பேஷ்கார் தனக்கு யுக்தமாகத் தோன்றுகிறபட்சத்தில் அந்த பிரிவில் சொல்லியிருக்கிற அபராதம் முழுமையும் மன்னிக்கலாம்.

2. (1) குறிப்பிட்ட உட்பிரிவின் (a)குறிப்பிட்ட பாகத்தின்படிக்குண்டான ஸர்டிபிகேட்டும் அதில் கண்டிருக்கிற சங்கதிகளுக்கு இந்த சட்டத்தில் [illegible] ஷியிருக்கிற காரியங்களின்பொருட்டு முடிவான சாட்சியாகும்.

43. தீர்வைக்குட்பட்டதாயிருந்து கிரமமாய் முத்திரை போடப்படாமல் [illegible] அல்லது தீர்வைக்குட்பட்ட ஆதாரவானது, [illegible] அல்லது பப்ளிக் ஆபீஸர் [illegible] ஆஜராக்கப்படாமலாவது அது எழுதப்பட்ட தேதிமுதல் கொண்டாவது ஒரு வருஷத்திற்குள் தன் இஷ்டமாய் டிவிஷன் பேஷ்காருக்கு முன்பாக கொண்டுவந்து காட்டி, அந்த ஆதாரவு கிரமமாய் முத்திரை போடப்பட்டிருக்கவில்லையென்கிற சங்கதியை அவருக்கு அறிவிக்கை செய்து, சரியான தீர்வைத்தொகையையாவது அதை சரிப்படுத்தவேண்டிய தொகையையாவது அவருக்குச் செலுத்துகிறேனென்றால், அந்த பேஷ்கார் அந்த ஆதாரவுக்குக் கிரமமாய் முத்திரை போடாமற்போனது அகஸ்மாத்தாகவாவது [illegible] அவசரத்தினாலாவது நேரிட்ட காரியமென்று தனக்குத் திருப்தியாகிற பட்சத்தில், அவர் 35-வது, 42 வது பிரிவுகளின்படி நடவடிக்கை நடத்தாமல், அந்தத் தொகையை வாங்கிக்கொண்டு இதில் அடுத்தாற்போன்றதில் சொல்லியிருக்கிறபடி நடத்தலாம்.

அகஸ்மாத்தாய் கிரமமான முத்திரை போடப்படாத ஆதாரவுகள்

44. (1) யாதொரு ஆதாரவைக்குறித்து வாங்கத்தக்க தீர்வையும் அபராதமும் [illegible] ருந்தால் அதுவும் 37, 42 அல்லது 43–வது பிரிவின்படி செலுத்தப்பட்டிருக்கவோ 50-வது பிரிவின்படி வசூலிக்கப்பட்டிருக்கவோ செய்யுமாகில், சட்டத்திற்குத் தக்கபடி, அந்த ஆதாரவை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவோ ரெஜிஸ்டர் பண்ணவோ செய்கிற நபராவது டிவிஷன் பேஷ்காராவது வாங்கப்பட்டது சரியான தீர்வையோ, அல்லது சரிப்படுத்தக்கூடிய, சரியான தீர்வையும் அபராதமுமோ (அந்தத்தொகையைக் கண்டு) அந்த ஆதாரவுக்காக வாங்கப்பட்டதென்பதையும், அதைச் செலுத்தின நபருடைய பெயரையும் இருப்பிடத்தையும் அதன்மேல் எண்டார்ஸ்பண்ணி ஸர்டிபை செய்யவேண்டும்.

37, 42, அல்லது 43,வது பிரிவின்படி தீர்வை செலுத்தப்பட்டவைகளோ 50,வது பிரிவின்படி தீர்வை வசூலிக்கப்பட்டவைகளோ ஆன ஆதாரவுகளின்மேல் எண்டார்ஸ் செய்வது.

(2) அப்படி எண்டார்ஸ் செய்யப்பட்ட பிரதி ஆதாரவும் அதற்குமேல் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகும்; மேலும், அதைக் கிரமமாய் முத்திரை போட்டிருந்தாற்போல் ரெஜிஸ்டரும் செய்யலாம். அதை அனுசரித்தும் பிரவர்த்திக்கலாம், [illegible] செய்யலாம்; ஆனாலும், யாருடைய ஸ்வாதீனத்திலிருந்து அப்படிப்பட்ட ஆதாரவு மதியல் செய்ததோ [illegible] கைக்கு வந்ததோ அந்த நபர் [illegible] கேட்பதன்பேரில் அந்த நபருக்காவது அந்த நபர் உத்தரவு செய்கிறபடிக்காவது அதை ஒப்பித்து விடவோ அது யாரிடமிருந்து கிடைத்ததோ அந்த உத்தியோகஸ்தருக்கு 42–வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி திருப்பியனுப்பவோ செய்யவேண்டும்:

ஆனால்,—

(a) 37-வது பிரிவின்படி தீர்வையும் அபராதமும் செலுத்தப்பட்டபிறகு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படவோ ரெஜிஸ்டர் செய்யப்படவோ செய்த ஆதாரவு, அப்படி மதியல் செய்யப்பட்ட தேதிமுதல் ஒரு மாதம் கழிவதற்கு முன்னாவது [illegible] அதைப் பின்னும் மதியலில் வைத்திருக்கவேண்டுமென்று டிவிஷன் பேஷ்காருக்கு ஸர்டிபிகேட் செய்த அந்த கோர்ட்டு [illegible] செய்யாதிருக்கிறபட்சத்திலும் [illegible] ஒப்பிக்கக்கூடாது.

(b) ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 139-வது பிரிவு 3-வது விலக்குக்கு இந்தப் பிரிவி லுள்ள எந்த நிபந்தனையினாலும் பாதகமுண்டாகமாட்டாது.

முத்திரை சட்டத்துக்கு விரோதமான குற்றத்திற்காகப் பிராது தொடருவது.

45. யாதொரு ஆதாரவைக்குறித்து இந்த அத்தியாயத்தின்படி நடவடிக்கை நடந்து வருகிறபோதாவது அபராதஞ் செலுத்தப்பட்டதற்கப்புறமாவது அந்த ஆதாரவு சம்பந்தமாக முத்திரைச் சட்டத்திற்கு விரோதமாய்க் குற்றஞ் செய்ததாகக் காணுகிற நபரின்மேல் பிராது தொடருவதற்குத் தடங்கலில்லை.

ஆனால், சரியான தீர்வை செலுத்தாமல் மோசஞ் செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு அந்தக் குற்றஞ் செய்யப்பட்டதென்று டிவிஷன் பேஷ்காருக்குத் தோற்றினாலொழிய, எதைக் குறித்து அப்படிப்பட்ட அபராதஞ் செலுத்தப்பட்டிருக்கிறதோ அந்த ஆதாரவு விஷயத்தில் அப்படிப்பட்ட பிராது தொடரக்கூடாது.

தீர்வை அல்லது அபராதஞ் செலுத்துகிறவர்கள் வேறொருவரிடம் அதை மறுபடி வசூல்பண்ணலாம்.

46. (1) யாதொரு ஆதாரவைக்குறித்து 37, 39, 42 அல்லது 43-வது பிரிவின்படி யாதொரு நபர் தீர்வையாவது அபராதமாவது செலுத்தியிருந்து, உடன்படிக்கையினாலாகிலும் 31-வது பிரிவினாலாவது அல்லது அந்த ஆதாரவு எழுதப்பட்ட காலத்தில் வழங்கிவந்த வேறே யாதொரு சட்டத்திலேயாவது உள்ள நிபந்தனைகளின்படிக்காகிலும், அந்த ஆதாரவுக்குச் சரியான முத்திரை சமர்ப்பிக்கிற செலவை ஏற்றுக்கொள்ள வேறொரு நபர் கடமைப்பட்டிருப்பானாகில், முதலில் சொன்ன நபர் தான் செலுத்தின தீர்வை அல்லது அபராதத் தொகையை அந்த வேறு நபரிடத்திலிருந்து மறுபடி வசூல்பண்ணிக்கொள்ள அருகனாவான்.

(2) அப்படி வசூல்பண்ணிக்கொள்ளும் பொருட்டு இந்த ரெகுலேஷன் படி அந்த ஆதாரவைக்குறித்துக் கொடுக்கப்பட்ட யாதொரு ஸர்ட்டிபிகேட்டானது அதில் ஸர்ட்டிபை செய்திருக்கிற சங்கதிகளுக்கு முடிவான சாட்சியமாகும்.

(3) அப்படிப்பட்ட நபர்கள் கட்சிக்காரர்களாயிருப்பதும், அந்த ஆதாரவு சாட்சியமாகக் காட்டப்பட்டிருப்பதுமான யாதொரு வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கையில் செய்யப்பட்ட யாதொரு உத்தரவிலே, கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றினால் மேற்படி தொகையைச் சேர்க்கலாம். கோர்ட்டார் அத்தொகையை அவ்வுத்தரவிலே சேர்க்காவிட்டால் அத்தொகையை வசூல் செய்வதற்காக இன்னும் நடவடிக்கைகள் நடத்தினால் அவை ஒப்புக்கொள்ளத்தக்கவைகளாகமாட்டா.

விசேஷங்களில் தண்டத் தொகையையாவது ஜாஸ்தி தீர்வையையாவது வாபஸ் பண்ணுவது.

47. (1) யாதொரு அபராதம் 37 அல்லது 42-வது பிரிவின்படி செலுத்தப்பட்டால், அது செலுத்தப்பட்ட தேதி முதல் ஒரு வருஷத்திற்குள் எழுத்து மூலமாய் மனு செய்யப்படுவதன் மேல், திவான் அந்த அபராத முழுமையையுமாகிலும் அதில் எவ்வளவையாகிலும் மறுபடி கொடுத்துவிடலாம்.

(2) சட்டப்படி விதிக்கத்தக்கதை விட அதிகமான முத்திரைத்தீர்வை 37 அல்லது 42-வது பிரிவின்படி விதிக்கப்பட்டதென்றும் செலுத்தப்பட்டதென்றும் திவான் அப்பிராயப்படுகிற விஷயத்திலே, அதை விதித்த உத்தரவு பிறந்தது முதல் மூன்று மாதத்திற்குள் எழுத்து மூலமாக மனு செய்துகொள்ளப்படுவதன் மேல திவான் ஜாஸ்தி தீர்வையை வாபஸ் செய்யலாம்.

40, வது பிரிவின்படி அனுப்பப்பட்ட ஆதாரவுகள் போக்கடிந்து போனால் உத்தரிப்பதில்லை.

48. (1) டிவிஷன் பேஷ்காரிடத்திற்கு 46-வது பிரிவு (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அனுப்பப்பட்ட யாதொரு ஆதாரவு தவாலில் போக்கடிந்துபோனாலும் அழிந்துபோனாலும் சேதப்பட்டாலும் அதற்காக அதை அனுப்புகிறவன் உத்தரிக்கவேண்டியதில்லை.

(2) யாதொரு ஆதாரவு அப்படி அனுப்பப்படுவதாயிருக்கையிலே, யாருடைய ஸ்வாதீனத்திலிருந்து அது மஹஜர் செய்கிறவருடைய கைக்கு வந்ததோ அந்த நபர் தன்னுடைய செலவிலே அந்த ஆதாரவுக்கு நகலெழுதி மஹஜர் செய்கிறவருடைய உறுதிக்கையெழுத்துப் போடச்சொல்லிக் கேட்கலாம்.

தொகை கொடுப்பவன் முத்திரை போடாமல் தான் வாங்குகிற பில்களுக்கும் ப்ராமிஸரி நோட்டுகளுக்கும் செக்குகளுக்கும் முத்திரைபோட அதிகாரம்.

49. ஒரு அணா தீர்வைக்குட்பட்ட பில் ஆப் எக்ஸ்சேஞ் அல்லது ப்ராமிஸரி நோட் அல்லது செக் முத்திரையில்லாமல் கொண்டுவந்து பணங் கொடுக்கச் சொல்லிக் காட்டப்பட்டால், அது அப்படி யாருக்குக் காட்டப்படுகிறதோ அந்த நபர் அதற்கு அவசியமான பணமுத்திரை ஒட்டலாம்; இதில் முன்னமே சொல்லியிருக்கிற விதமாய் அதை அழித்துவிட்டு, அப்படிப்பட்ட பில் அல்லது நோட் அல்லது செக்குக்குண்டான பணத்தைச் செலுத்தலாம்; அதற்குமேல், அந்தத் தீர்வை செலுத்தவேண்டியிருந்த நபரின்மேல் அதைக் கணக்க

க்கலாம்; அல்லது, பேறுசொல்லியபடி செலுத்துகிற தொகையிலே அதைக் கழித்துக் கொள்ளலாம்; அப்படிப்பட்ட பில் அல்லது நோட் அல்லது செக்கானது இராவுக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலே சரியானதாய்ச் செலுத்தக்கதாக எண்ணப்படும்.

ஆனால், அப்படிப்பட்ட பில் அல்லது நோட் அல்லது செக்கைப்பற்றி உள்ளதுக்குத் தக்க யாதொரு தண்டனையினின்றாவது வழக்கையினின்றாவது எவனும் இதினால் எந்த விதத்திலும் விலக்கப்படமாட்டான்.

இவ்வகைகளையும் தண்டத்தொகைகளையும் வசூலிப்பது.

50. இந்த அத்தியாயத்தின்படி செலுத்தவேண்டியதாயிருக்கிற சகல தீர்வைகளையும் தண்டத்தொகைகளையும் வேறே தொகைகளையும், அவைகளை யார் செலுத்தவேண்டியதோ அவனுடைய அசையும் பொருளை ஜப்தி செய்து விக்கிரயம் பண்ணியாவது, நிலவரியின் பாக்கியை வசூல் செய்வதற்காக அந்தந்த சமயத்திலே செல்லுபடியாயிருக்கிற வேறே யாதொரு முறையினாலாவது கலெக்டர் வசூல் செய்யலாம்.

5-ம் அத்தியாயம்.

சில விஷயங்களில் முத்திரைக்கடிதாசிகளுக்காக ஒத்துக்கொடுப்பது.

கெட்டுப் போன முத்திரைக்கடிதாசிகளுக்காக ஒத்துக்கொடுப்பது.

51. வேண்டியிருக்கிற சாட்சியத்தைப்பற்றியாவது செய்யவேண்டிய விசாரணையைப்பற்றியாவது தம்முடைய அபிப்பிராயப்படி செய்யப்படுகிற விதிகளுக்குட்பட்டு, டிவிஷனல் போர்டுகள் 52-வது பிரிவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற காலவரையறைக்குள் மனு செய்துகொள்ளப்பட்டு, நடந்த சங்கதிகளைக் குறித்து அவருக்குத் திருப்தியானால், இதில் பின்னால் கண்டிருக்கிற விஷயங்களில் முத்திரை போட்டு முத்திரையிடப்பட்டுக் கெட்டுப்போன முத்திரைக்கடிதாசிகளுக்காக டிவிஷனல் போர்டுகள் ஒத்துக்கொடுக்கலாம்,

அவையாவன:—

(a) யாதொரு கடிதாசியின்மேல் எழுதப்பட்ட ஆதாரத்தை யாதொருவன் கையெழுத்துப் பண்ணிப் பூர்த்தி செய்கிறதற்கு முன்னமே, யோசனையில்லாமலும் வேண்டுமென்றில்லாமலும் கெட்டுப்போயாவது அழிக்கப்பட்டாவது எழுதியதிலே பிழைப்பட்டதனாலாவது வேறே எவ்விதத்திலாகிலும் உத்தேசமான காரியத்திற்கு உபயோகமற்றதாயாவது அந்தக்கடிதாசியின் மேலிருக்கிற முத்திரை;

(b) யாதொரு தஸ்தாவேஜு முழுவதுமாவது கொஞ்சமாவது எழுதப்பட்டு, அதில் சம்பந்தப்பட்டவர்களில் எவனாவது அதில் கையெழுத்துப் போடாமலேனும் அதை எழுதி முடிக்காமலேனுமிருந்தால் அப்படிப்பட்ட தஸ்தாவேஜின் மேலிருக்கிற முத்திரை;

(c) பில் ஆவ் எக்ஸ்சேஞ்சு, செக் அல்லது பிராமிஸரி நோட்டுகளின் விஷயத்திலே—

(1) யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்சு அல்லது செக்கானது எழுதுகிறவனாலாவது அவனுடைய பட்சத்திலாவது கையெழுத்து செய்திருந்து, ஒப்புக்கொள்ளப்படாமலேனும் எவ்விதத்திலாகிலும் உபயோகிக்கப்படாமலேனும், ஒப்புக்கொள்ளக்கடவது ரூபமாகவன்றி வேறே யாதொரு காரியத்திற்காக அவனுடைய கையிலிருந்து ஒப்பிக்கப்படாமலேனுமிருக்குமாகில், யாதொரு முத்திரை அழுத்தியிருக்கிற கடிதாசியில் பின்பு எழுத வேண்டிய யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்சு அல்லது செக்கை அங்கீகரிப்பதாகவாவது அங்கீகரிப்பதற்காகவாவது உத்தேசமான யாதொரு கையெழுத்து இராவிட்டால் அப்படிப்பட்டதற்குப் போட்டிருக்கும் முத்திரை;

(2) எழுதிக்கொடுக்கிறவனாலாவது அவனுடைய பட்சத்திலாவது கையெழுத்து செய்திருந்து, எவ்விதத்திலேனும் உபயோகிக்கப்படாமலாகிலும் அவனுடைய கையிலிருந்து ஒப்பிக்கப்படாமலாகிலுமிருக்கிற யாதொரு பிராமிஸரி நோட்டுக்குப் போட்டிருக்கும் முத்திரை;

(3) பில் ஆவ் எக்ஸ்சேஞ்சு, செக் அல்லது பிராமிஸரி நோட்டை எழுதுகிறவனாவது அவன் பட்சத்திலாவது அதில் கையெழுத்து செய்திருந்து, அதாவது விட்டுப்போனதனாலாகிலும் பிசகினாலாகிலும் கெட்டுப்போனதாகவாவது உபயோகமற்றதாகவாவது இருக்குமாகில் பில் ஆவ் எக்ஸ்சேஞ்சு அல்லது செக்கானது அது அங்கீகாரத்திற்காகக் கொண்டுவந்து காட்டப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் என்டார்ஸ் செய்யப்பட்டிருந்த போதிலும், பிராமிஸரி நோட்டானது அது பணம் பெறுகிறவனுக்கு ஒப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மெய்யென்னவெனில், விட்டுப்போனதையாவது கேடுபட்டதையாவது திருத்துவதற்கு, எல்லா விஷயங்களிலும் கெட்டுப்போன பில் செக் அல்லது நோட்டுக்குப் போடப்பட்ட அதேமாதிரி முத்திரை போடப்பட்ட வேறொரு பூர்த்தியான பில் ஆவ் எக்ஸ்சேஞ்சு செக் அல்லது பிராமிஸரி நோட்டைக் கொண்டுவந்து

காட்டப்பட்டால் தான், அப்படிப்பட்டதற்கு உபயோகிக்கப்பட்டாவது உபயோகிக்க எத்தனிக்கப்பட்டாவதிருக்கிற முத்திரை:

(d) அடியில் கண்டிருக்கிற ஆதரவுகளில் எதற்காகவாவது அவைகளின் சம்பந்தப்பட்ட எவனாலாகிலும் உபயோகிக்கப்பட்ட முத்திரை, அவையாவன:—

(1) ஆதிமுதல் சட்டப்படி அநாதமாய்ச் செல்லாததாகப் பின்பு கண்டுகொள்ளப்பட்ட ஆதரவு.

(2) யாதொரு பிசகு அல்லது பிழை இருப்பதினாலே பிரதமத்தில் உத்தேசிக்கப்பட்ட காரியத்திற்கு உதவாததாகப் பின்பு கண்டுகொள்ளப்பட்ட ஆதரவு.

(3) அதில் கையெழுத்துபண்ணிப் பூர்த்தி செய்யவேண்டியவன் அப்படி செய்யாமல் இறந்துபோனதினாலாவது, அப்படிப்பட்ட யாதொரு நபர் அதில் கையெழுத்து பண்ணிப் பூர்த்தி செய்ய நிராகரிப்பதினாலாவது, யோசித்திருந்த மாதிரியாக உத்தேசமான காரியம் சித்தியாகும்படி பூர்த்தி செய்யக் கூடாமையாயிருக்கிற ஆதரவு.

(4) முக்கியமானவனொருவன் அதில் கையெழுத்து செய்ய அசக்தனாயிருந்தாலும் நிராகரிப்பதினாலோ அது பூர்த்தியாகாமையைப்பற்றி, அது உத்தேசிக்கப்பட்ட காரியத்திற்கு உள்ளபடி பெறாமல் பூர்த்தியற்றதாயிருக்கிற ஆதரவு.

(5) அதன்படி நடக்கவாகிலும், அதனால் பத்திரப்படுத்த உத்தேசிக்கப்பட்ட பணத்தை முன்னதாய்க் கொடுக்கவாகிலும் யாதொரு நபர் நிராகரிப்பதினாலாவது, அதனால் கொடுக்கப்பட்ட யாதொரு தொழிலை நிராகரிப்பதினாலாவது அங்கீகரியாமையினாலாவது உத்தேசமான காரியத்துக்கு முழுவதும் உதவாமற்போகிற ஆதரவு.

(6) அதனால், சித்தியாகும்படி உத்தேசிக்கப்பட்ட காரியம் அதே நபர்களுக்குள் ஏற்பாடாகி அதைவிடக் குறையாத மதிப்புள்ள முத்திரை போட்டிருக்கிற வேறொரு ஆதரவினாலே சித்தியாவதைப்பற்றி உதவாமற்போகிற ஆதரவு.

(7) குறைந்த மதிப்புள்ளதாயிருந்து அதனால் சித்தியாகும்படி உத்தேசிக்கப்பட்ட காரியம் அதே நபர்களுக்குள் ஏற்பாடாகி அதைவிடக் குறையாத மதிப்புள்ள முத்திரை போட்டிருக்கிற வேறொரு ஆதரவினால் சித்தியாக்கப்பட்டிருக்குமானால், மேற்படி குறைந்த மதிப்புள்ள ஆதரவு.

(8) வேண்டுமென்றல்லாமல் பிசகாய்க் கெட்டுப்போய், அதற்குப்பர்த்தியாக அதே நபர்களுக்குள் அதே காரியத்திற்காக வேறொரு ஆதரவு எழுதிக் கையெழுத்து பண்ணிப் பூர்த்திசெய்து கிரமமாய் முத்திரை போட்டிருக்கும்போது மேற்படி கெட்டுப்போன ஆதரவு.

ஆனால், கையெழுத்துபண்ணிப் பூர்த்தி செய்திருக்கிற ஆதரவு விஷயத்திலே, அந்த ஆதரவு சாட்சியமாகக் கொடுக்க அல்லது கொடுப்பதாகச் சொல்லக்கூடியதாகவாவது அவ்வாறு செய்திருக்கக்கூடியதாகவாவதுள்ள யாதொரு சட்டசம்மதமான நடவடிக்கை ஆரம்பஞ் செய்யப்படாமலும், அந்த ஆதரவு ரத்து செய்யும்படி கொடுக்கப்பட்டுமிருக்க வேண்டும்.

விவரணம்.—ஒரு ஆதரவின் விஷயமாய் விதிக்கப்படவேண்டிய முழுத் தீர்வையும் செலுத்தப் பட்டிருக்கிறதென்று 34-வது பிரிவின்படி டிவிஷன்பேஷ்காரால் கொடுக்கப்படும் ஸெர்ட்டிபிகேட்டானது இந்தப்பிரிவின் தாத்பரியப்படி அழுத்தப்பட்ட முத்திரையாகும்.

51-வது பிரிவின்படி பரிகாரத்திற்காக மனு எப்பொழுது செய்துகொள்ள வேண்டுமென்பது.

52. 51-வது பிரிவின்படி பரிகாரத்திற்காகச் செய்துகொள்ளப்படும் மனுவை அடியிற்கண்ட காலவரையறைகளுக்குள்ளே செய்துகொள்ளவேண்டும். எப்படியென்றால்:—

(1) (d) (5) உட்பிரிவிற்கண்ட விஷயங்களிலே ஆதரவின் தேதிமுதல் இரண்டு மாதத்திற்குள்ளாக;

(2) சம்பந்தப்பட்டவர்களின் எவனும் ஆதரவை எழுதிப்பூர்த்திசெய்யாமலிருக்கும் முத்திரைக்கடுதாசியின் விஷயத்திலே முத்திரை கெட்டுபோனபின்பு ஆறுமாதத்திற்குள்ளாக;

(3) சம்பந்தப்பட்டவர்களில் எவனாகிலும் ஆதரவை எழுதிப் பூர்த்திசெய்திருக்கும் முத்திரைக்கடுதாசியின் விஷயத்திலே ஆதரவின் தேதிக்குப்பின்பு ஆறுமாதத்திற்குள்ளும், அதில் தேதியில்லாவிட்டால் முதலிலாவது தனிதாவது எழுதிக்கொடுத்தவன் அதில் கையெழுத்துபோட்டுப் பூர்த்திசெய்தபின்பு ஆறுமாதத்திற்குள்ளும்;

ஆனால்,—

(a) கெட்டுப்போன ஆதாரவு போதுமான நியாயங்களினால் திருவிதாங்கோட்டுக்கு வெளியில் அனுப்பப்பட்டிருந்தால், அது திருவிதாங்கோட்டில் மறுபடி வரப்பெற்றுக்கொள்ளப்பட்டபின்பு ஆறு மாதத்திற்குள்ளே மறு செய்துகொள்ளலாம்.

(b) எதற்குப் பிரதியாக வேறொரு ஆதாரவு எழுதப்படுகிறதோ அந்த ஆதாரவை ரத்துபண்ணும்படி நீக்கக்கூடாத முகாந்தரங்களினாலே மேற்கண்ட காலத்திற்குள் கொடுக்கக்கூடாமையானால், பிரதி ஆதாரவின் தேதிக்குப்பின்பு ஆறுமாதத்திற்குள்ளே மறு செய்துகொள்ளலாம்.

அச்சிட்ட கூறுகளுக்கு சட்டப்படி ஏற்பட்ட கூட்டத்தாருக்கு இனி வேண்டியிராவிட்டால் அவைகளின் விஷயத்திலே ஒத்துக் கொடுப்பது.

53. சட்டப்படி ஏற்பாடான யாதொரு கம்பெனியாராவது ஒன்றாயச்சேர்ந்த வேறே கூட்டத்தாராவது கையாலும் அச்சிட்ட ஆதாரவு கூறுகளுக்காக உபயோகிக்கப்பட்ட முத்திரைக்கடுதாசிகள் அவர்களுக்கு ஏதேனும் போதுமான நியாயத்தினால் வேண்டியிராமற்போனாலும் திவான் அவ்வகையான முத்திரைக்கடுதாசிகளுக்காக நிர்வைசரியமாய் செலுத்தப்பட்டதென்று திவானுக்குத் திருப்தியாகிறபட்சத்திலே, காலவரையறையில்லாமலே, அவைகளுக்காக ஒத்துக் கொடுக்கலாம்.

பிசகாய் உபயோகிக்கப்பட்ட முத்திரைக்கடுதாசிகளுக்காக ஒத்துக் கொடுப்பது.

54. (a) தீர்வைக்குட்பட்ட ஆதாரவுக்காக எவனாகிலும், இந்த ரெகுலேஷனின் படி செய்யப்பட்ட விதிகளில் அதற்கு ஏற்படுத்தப்பட்ட வகைதவிர வேறேவகையான முத்திரையையாவது அவசியமானதைவிட அதிகவிலையுள்ள முத்திரையையாவது பிசகாய் உபயோகித்திருந்தாலும், தீர்வைக்குட்படாத ஆதாரவுக்காகப் பிசகாய் முத்திரையை உபயோகித்திருந்தாலும்,

(b) யாதொரு ஆதாரவுக்காக உபயோகிக்கப்பட்ட முத்திரையானது 14-வது பிரிவிலுள்ள நிபந்தனைகளுக்கு விரோதமாய் அந்த ஆதாரவு எழுதப்பட்டிருப்பதைப்பற்றிப் பிசகாக 16-வது பிரிவின்படி உபயோகமற்றதாய் விட்டாலும்,

டிவிஷன்பேஷ்கார் அந்த ஆதாரவு தேதிக்குப்பின்பு ஆறுமாதத்திற்குள்ளும், அதில் தேதி யில்லாவிட்டால் முதலிலாவது தனித்தாவது எழுதிக்கொடுத்தவன் அதில் கையெழுத்து செய்து பூர்த்திபண்ணியபின்பு ஆறுமாதத்திற்குள்ளும் மனுசெய்யப்படுவதன் மேல், அந்த ஆதாரவு தீர்வைக்குட்பட்டதானால் அதன்மேல் சரியான தீர்வை முத்திரை மறுபடி குத்தப்பட்டபின்பு அப்படி பிசகாய் உபயோகிக்கப்பட்ட அல்லது உபயோகமற்றதாய்விட்ட முத்திரையை ரத்துசெய்து, கெட்டுப்போனதாக ஒத்துக்கொடுக்கவேண்டும்.

கெட்டுப்போன அல்லது பிசகாய் உபயோகிக்கப்பட்ட முத்திரைகளுக்காக இன்னபடி ஒத்துக்கொடுப்பது.

55. கெட்டுப்போன அல்லது பிசகாய் உபயோகிக்கப்பட்ட முத்திரைகளுக்கு ஒத்துக்கொடுக்கிற யாதொரு விஷயத்திலும், அவைகளுக்குப்பிரதியாக டிவிஷன்பேஷ்கார்—

(a) அதே வகையும் விலையுமுள்ள வேறே முத்திரைகளையாவது,

(b) வேண்டியதாயிருந்தால் தகுதியான பேஷ்காருக்கு தகுதியான விலையுள்ள வேறே யாதொருவகை முத்திரைகளையாவது,

(c) அவருக்கு யுக்தமாயிருந்தால், ரூபாய் ஒன்றுக்கும் ஒரு ரூபாய்க்குக் குறைந்த சில்லறைக்கும் ஒரு அணா வீதம் குறைத்துக்கொண்டு அந்த விலையைப் பணமாகவாவது;

கொடுக்கலாம்.

வேண்டியிராத முத்திரைக்கடுதாசிகளுக்காக ஒத்துக் கொடுப்பது.

56. கெட்டுப்போயாவது உத்தேசமான காரியத்துக்குத் தகாததாகவாவது உபயோகமற்றதாகவாவதிராத முத்திரை அல்லது முத்திரைகளை யாதொருவன் வைத்துக்கொண்டிருந்து, அவை தற்கால உபயோகத்திற்கு அவனுக்கு வேண்டியிராதபட்சத்தில் அவன் அவைகளை ரத்துபண்ணும்படி கொண்டுவந்துகொடுத்து—

(a) வாஸ்தவமாய் உபயோகிக்கவேண்டிய எண்ணத்தோடு அவைகளை தான் வாங்கினானென்றும்,

(b) அவைகளின் பூர்த்தியான விலையைத் தான் செலுத்தினானென்றும்,

(c) அவைகள் அப்படி கொண்டுவந்து கொடுக்கப்பட்ட தேதிக்கு முந்தின ஆறுமாத காலத்திற்குள் அவைகள் அப்படி வாங்கப்பட்டவென்றும்

டிவிஷன் பேஷ்காருக்குத் திருப்தியாகும்படி ருஜூசெய்தால், அவர் ரூபாய் ஒன்றுக்காவது அதற்குக்குறைந்த பாகத்திற்காவது ஒரு அணா வீதம் கழித்துக்கொண்டு அந்த முத்திரை அல்லது முத்திரைகளின் விலையைப் பணமாக அவனுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

ஆனால் அந்த நபர் முத்திரைக்கடிதாசி விற்பதற்காக லைசென்ஸ் கொடுக்கப்பெற்றவனாயிருந்தால் டிவிஷன்பேஷ்கார் தனக்கு யுக்தமாகத் தோற்றும்பட்சத்தில் மேலே கண்டபடி எதையும் கழித்துக்கொள்ளாமல் கிரயத்தை கொடுத்துவிடலாம.

சில டிபென்சூர்களைப் புதுப்பித்துக் கொள்ளும்போது ஒத்துக்கொடுப்பது.

57. கிரமமாய் முத்திரை போடப்பட்ட யாதொரு கடன்பத்திரமானது அதேஷரத்துகளின்படி ஒரு நூதன டிபென்சூர் பிறந்ததனால் புதிப்பிக்கப்படும்போது டிவிஷன்பேஷ்கார் ஒரு மாதத்திற்குள் மனுசெய்துகொள்ளப்படுவதன்மேல, அந்த டிபென்சூரைப் பிறப்பிக்கிறவனுக்கு, பிரதம டிபென்சூரின் முத்திரை விலையோ அல்லது நூதன டிபென்சூரின் முத்திரை விலையோ எது குறைந்திருக்கிறதோ அதை வாபஸ் செய்யவேண்டும்.

ஆனால், பிரதம டிபென்சூரை டிவிஷன் பேஷ்காருக்கு முன்காட்டி பேஷ்காருடைய அனுமதியுடன் திவான் நிர்ணயிக்கிறவிதமாக ரத்து செய்துகொள்ளவேண்டும்.

விவரணம்.—அடியிற்கண்ட வேறுபாடுகளிருந்தபோதிலும் பாதகமில்லாமலே ஒரு கடன்பத்திரம் இந்த பிரிவின் தாற்பரியப்படி அதே ஷரத்துகளை அனுசரித்துப் புதிப்பிக்கப்பட்டதாக எண்ணப்படும்—

(a) ஒரு பிரதம டிபென்சூருக்குப் பர்த்தியாக இரண்டு அல்லது பல டிபென்சூர்களைப் பிறப்பிப்பது, அடையப்படும் மொத்தத்தொகை ஒரு அளவாகவே இருக்கவேண்டும்.

(b) இரண்டு அல்லது பல பிரதம டிபென்சூர்களுக்குப்பர்த்தியாக ஒரு டிபென்சூர பிறப்பிப்பது - அடையப்படும் மொத்தத்தொகை ஒரு அளவாகவே இருக்கவேண்டும்.

(c) பிரதமத்தில் வைத்துக்கொண்டிருந்தவன் பெயருக்குப் பர்த்தியாக, புதுப்பிக்கபபடும் காலத்தில் அதை வைத்துக்கொண்டிருப்பவனுடைய பெயரை அமைப்பது.

(d) வட்டி வீதத்தையாவது அதை செலுத்தும் தேதிகளையாவது மாற்றுவது.

6-ம் அத்தியாயம்.

ஆலோசனைக்கு அனுப்புவதும் மேற்பரிசோதனையும்.

பிரதான ரெவினியு அதிகாரியின் மேல்விசாரணையும் அந்த அதிகாரிக்குச் சங்கதியைத் தெரிவித்தலும்.

58. (1) 4-வது 5-வது அத்தியாயங்களின்படியும் 28-வது பிரிவுமுதல் விலக்கு (a) என்ககுறிப்பிட்ட உட்பிரிவின்படியும டிவிஷன்பேஷ்கார் செலுத்தத்தக்க அதிகாரங்கள் திவான் மேல்விசாரணைக்குட்பட்டிருக்கவேண்டும்.

(2) யாதொரு ஆதாரவு உட்பட்டிருக்கிற தீர்வைத்தொகையைக்குறித்து 33, 42, அல்லது 43-வது பிரிவின்படி பிரவர்த்திக்கிற டிவிஷன்பேஷ்காருக்குச் சந்தேகமுண்டானல், பேஷ்கார் அந்த சங்கதியை விவரமாயெழுதி, அதைக்குறித்துத தன்னுடைய அபிப்பிராய சகிதமாய் அதை திவானுடைய தீர்மானத்திற்கு அனுப்பலாம்.

(3) திவான் அந்த சஙகதியை யோசித்துத் தன்னுடைய தீர்மானத்திற்கு நகலை டிவிஷன்பேஷ்காருக்கு அனுப்பவேண்டும், அவர் அந்த தீருமானத்திற்கு ஒத்திருககும்படி தீர்வை ஏதாவதிருநதால் அதை ஏற்படுத்தி வாங்கத்தொடஙகவேண்டும்.

திவான் ஹைகோர்ட்டாருக்கு சங்கதியைத் தெரிவித்தல்.

59. (1) திவான் 58-வது பிரிவில்(2) குறிப்பிடட உட்பிரிவின்படி தன்னிடத்திற்கு அனுப்பப்பட்டாகிலும் மற்றப்படி தனபார்வைக்கு வந்தாகிலுமிருக்கிற சங்கதியை எழுதி அதைத் தன் அபிப்பிராய சகிதமாய் ஹைகோர்ட்டுக்கு அனுப்பலாம்.

(2) அப்படிப்பட்ட பிரதி சஙகதியையும், ஹைகோர்ட் புல்பெஞ்சு தீர்மானிக்கவேண்டும், அபிப்பிராயம் வேறுபடுகிற விஷயத்தில் பெருந்தொகை யாருடைய அபிப்பிராயத்தின்படி நடத்தலாகும்.

தெரிவித்த சங்கதியைப் பற்றி இன்னும் விவரங்களை கேட்க ஹைகோர்ட்டுக்குள்ள அதிகாரம்.

60. அந்த சங்கதியில் கண்டிருக்கிற வர்த்தமானஙகள் அதனாலுண்டான சமுசயங்களை தீர்மானிகக கூடியதற்குப் போதுமானதாயிருக்கிறதென்று ஹைகோர்ட்டுக்கு திருப்தியாகாவிட்டால் அந்த கோர்ட்டு அந்த சங்கதி எழுதி அனுப்பின திவானுக்கு அதை மறுபடி அனுப்பி அதில் இன்னும் சேர்க்கும்படிக்காவது மாற்றும்படிக்காவது தாங்கள் உத்தரவு பண்ணுகிறபடி செய்யசசொல்லலாம்.

தெருவித்த சங்கதியை தீர்மானிக்கையில் நடவடிக்கை.

61. ஹைகோர்ட் அப்படிப்பட்ட சங்கதியை விசாரணைசெய்தபின்பு, அதனுக்குண்டாயிருந்த சமுசயங்களைத்தீர்மானித்து, அந்தத்தீர்மானத்திற்குண்டான ஆதாரங்களை கண்டெழுதி அதைக்குறித்து தங்கள் தீர்ப்பைக்கொடுக்கவேண்டும். இவர்களுக்கு அந்த கோர்ட்டு அந்தத்தீர்ப்புக்கு நகலைத்தங்கள் கோர்ட்டுமுத்திரையும் ரெஜிஸ்ட்ராருடைய கையெழுத்தும்பட அனுப்பவேண்டும். இவன் அந்த நகலை வாங்கிக்கொண்டபின்பு அந்தத்தீர்ப்புக்கு ஒத்திருக்கும்படி அந்த சங்கதியைப் பைசல்செய்யவேண்டும்.

மற்ற கோர்ட்டுகள் ஹைகோர்ட்டுக்கு சங்கதியைத்தெருவிப்பது.

62. (1) ஹைகோர்ட்டைத்தவிர வேறே எந்தக்கோர்ட்டாவது 37 வது பிரிவைச்சேர்ந்த (ந) குறிப்பிட்ட விலக்கின்படி யாதொரு ஆதரவுக்காகச் செலுத்தவேண்டிய தீர்வைத் தொகையைக்குறித்து சந்தேகங்கொண்டால், ஜட்ஜி அந்த சங்கதியை விவரமாக எழுதி அதைத் தன அபிப்பிராயசஹிதமாய், ஹைகோர்ட்டினுடைய தீர்மானத்திற்கு அனுப்பலாம்.

(2) ஹைகோர்ட்டு 59-வது பிரிவின்படி ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருந்தாற்போல் அந்த சங்கதியைப்பற்றி நடத்தவேண்டியதுமல்லாமல், தங்கள் கோர்ட்டு முத்திரையும் ரெஜிஸ்ட்ராருடைய கையெழுத்தும்பட்ட தங்கள் தீர்ப்புக்கு நகலையும் ஆலோசனைக்கு அனுப்பின ஜட்ஜிக்கு அதேமாதிரியான வேறொரு நகலையும் அனுப்பவும் வேண்டும்; அவர்கள் அந்த நகலை வாங்கிக்கொண்டதன்மேல் அந்தத்தீர்ப்புக்கு ஒத்திருக்கும்படி அந்த சங்கதியைப் பைசல் செய்யவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஆலோசனைக்கு அனுப்பவேண்டியவைகளை டிஸ்ட்ரிக்ட்கோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட கோர்ட்டார் அனுப்புகிறதாயிருந்தால் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுமூலமாய் அனுப்பவேண்டும்; கீழ்ப்பட்ட ரெவினியு கோர்ட்டார் அனுப்புகிறதாயிருந்தால், அடுத்த மேலான கோர்ட்டு மூலமாய் அனுப்பவேண்டும்.

முத்திரைகள் போதுமானதென்பதைப்பற்றிக் கோர்ட்டுகள் செய்கிற சில தீர்மானங்களை மேற்பார்வை பண்ணுவது.

63. (1) சிவில் அல்லது ரெவினியு அதிகாரஞ்செலுத்துகிற யாதொரு கோர்ட்டாராகிலும் க்ரிமினல் ப்ரொஸீஜர்கோர்ட் 12-வது அல்லது 35-வது அத்தியாயத்தின்படிக்கான யாதொரு நடவடிக்கையில் யாதொரு க்ரிமினல் கோர்ட்டாராகிலும் கிரமமாய் முத்திரை போடப்பட்டதாகிலாவது முத்திரை வேண்டியிராததாகவாவது 37-வது பிரிவின்படி தீர்வையும் அபராதமும் செலுத்தப்படுவதன்மேலாவது யாதொரு ஆதரவைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படியான உத்தரவு செய்தால், அந்தக்கோர்ட் உத்தரவின்மேல் எந்தக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்படுகிறதோ அல்லது அந்தகோர்ட் எந்தகோர்ட் ஆலோசனைக்கு அனுப்புகிறார்களோ அந்த கோர்ட்டார் தங்களிஷ்டமாயாவது டிவிஷன்பேஷ்காருடைய மனுவின்மேலாவது அந்த உத்தரவைக்குறித்து ஆலோசனை செய்யவேண்டும். அந்தப்படி ஆலோசனை செய்கிறதில் அந்த கோர்ட் 37-வது பிரிவின்படி தீர்வையும் அபராதமும் செலுத்தப்படாமலாவது செலுத்தியிருக்கிறதைவிட அதிக தீர்வையும் அபராதமும் செலுத்தப்படாமலாவது அப்படிப்பட்ட ஆதரவைச் சாட்சியமாக ஏற்றுக்கொண்டிருக்கக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டால், அக்கோர்ட் அந்தப்படிக்கு தீர்மானமெழுதி, அந்த ஆதரவுக்குண்டான தீர்வைத்தொகையை நிச்சயித்து, யாருடைய ஸ்வாதீனம் அல்லது அதிகாரத்தில் அந்த ஆதரவு அப்போதிருக்கிறதோ அந்த நபரை அதைக் கொண்டுவரச்சொல்லி உத்தரவுசெய்து கொண்டுவரப்பட்டதின்மேல் அதை மதியல் செய்யலாம்.

(2) இந்த பிரிவின்படி யாதொரு தீர்மானம் எழுதப்பட்டபின்பு அதை எழுதின கோர்ட் அதற்கு நகலை டிவிஷன்பேஷ்காருக்கு அனுப்பவேண்டும், அதுசம்பந்தமான ஆதரவு மதியல் செய்யப்பட்டிருந்தாலும் மற்றப்படி அந்தக்கோர்ட்டினுடைய ஸ்வாதீனத்திலிருந்தாலும் அந்த ஆதரவையும் அவருக்கு அனுப்பவேண்டும். அதற்குமேல், டிவிஷன் பேஷ்கார் தான நிச்சயிப்பதான தகுதியுடைய காலத்துக்குள் தீர்வை செலுத்தவேண்டுமென்று எழுத்து மூலமாய் கேட்கவும் அந்த ஆதரவை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படியான உத்தரவிலாவது 44 அல்லது 4[illegible]-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு ஸெர்டிபிகேட்டிலாவது என்னசொல்லியிருந்த போதிலும் அந்த ஆதரவுசம்பந்தமாய் முத்திரை சட்டத்துக்கு விரோதமாக யாதொரு குற்றம்செய்திருப்பவனாய்த் தான் நினைக்கிற நபர்மேல் அந்த குற்றத்திற்காகப் பிராது நடத்தவுஞ்செய்யலாம்.

(3) ஆனால் (தீர்வையும் அபராதமுமுட்பட) அந்த கோர்ட் தீர்மானப்படி 37-வது பிரிவின்பிரகாரம் அந்த ஆதரவுக்காகச் செலுத்தப்படத்தக்கதாயிருந்த தொகை டிவிஷன் பேஷ்காரிடத்தில் செலுத்தப்படுமாகில், சரியான தீர்வை செலுத்தாமல் மோசஞ்செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு அந்த குற்றஞ் செய்யப்பட்டதென்று டிவிஷன் பேஷ்கார் நினைத்தாலொழிய அப்படி பிராது தொடரக்கூடாது;

(4) அப்படிப்பட்ட பிராதைப்பற்றியல்லாமல், இந்த பிரிவின்படி செய்யப்பட்ட தீர்மானத்தினாலே, யாதொரு ஆதரவைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படியான உத்தரவின் ஸாதிதத்திற்காவது, 44-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஸெர்டிபிகேட்டின் ஸாதிதத்திற்காவது பாதகமுண்டாகமாட்டாது.

ரெஜிஸ்டர் செய்யும் உத்தியோகஸ்தர்களின் தீர்ப்புகளை டிவிஷன்பேஷ்கார் பரிசோதனை செய்வது.

64. ரெஜிஸ்டர்செய்யும் ஒரு உத்தியோகஸ்தன் 37-வது பிரிவின்படி ஒரு ஆதாரவை ரெஜிஸ்டர்செய்திருக்கவும், அதன் நகல் ஒன்றை 40-வது பிரிவின்படி டிவிஷன்பேஷ்காருக்கு அனுப்பியிருக்கவுஞ்செய்தால், டிவிஷன் பேஷ்கார் தாமசமின்றி, அந்த நகலைப் பரிசோதிக்கவும், செலுத்தப்பட்டிருந்த தீர்வை, அபராதம் இவைகளைவிட அதிகமான தீர்வையும் செலுத்தாமல், அந்த ஆதாரவை ரெஜிஸ்டர்செய்திருக்கக் கண்டதென்று டிவிஷன்பேஷ்காருக்கு அபிப்பிராயமிருந்தால், பேஷ்கார் அந்தப்படிக்கு ஒரு தீர்மானம் ரிக்கார்டுசெய்யவும், அவ்வாறான ஆதாரவுக்கு வாங்கவேண்டிய தீர்வையின் தொகை இன்னதென நிச்சயிக்கவும் செய்வதுடன் அக்காலத்தில் அந்த ஆதாரவு யாருடைய கையிலாவது அதீனத்திலாவது இருக்கின்றதோ, அவனிடம் அதைக் கொண்டுவரும்படி ஆஞ்ஞாபிக்கவும், அது கொண்டுவரப்படும்போது அதை மறியல் பண்ணவும் செய்யலாம்.

இப்பிரிவின்படி ஏதாவது தீர்மானம் ரிக்கார்டு செய்யப்பட்டிருக்கும்போழுது, அந்த ஆதாரவு விஷயத்தில், அடுத்த முன்பிரிவின்படியுள்ள தீர்மானங்களின் விஷயத்தில், ஏற்பாடுசெய்திருக்கும் நடவடிக்கையைத்தானே டிவிஷன்பேஷ்கார் செய்யலாம்.

7-ம் அத்தியாயம்.

க்ரிமினல் குற்றங்களும் நடவடிக்கையும்.

கிரமமாய முத்திரை போடப்படாத ஆதாரவை எழுதிக் கொடுப்பது முதலியவற்றிற்குத் தண்டனை.

65. (1) (*a*) யாதொரு பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ்—செக்—அல்லது பிராமிஸரிநோட்டைக் கிரமமாய முத்திரைபோடாமல் எவனாவது எழுதினாலும் செய்தாலும் பிறப்பித்தாலும் எண்டார்ஸ்பண்ணினாலும் ட்ரான்ஸ்பர் செய்தாலும் சாட்சியாகவல்லாமல் மற்றப்படி கையெழுத்து பண்ணினாலும், அங்கீகரிக்கும்படிக்காவது பணஞ்செலுத்தும்படிக்காவது கொண்டுவந்து கொடுத்தாலும், அதை அங்கீகரித்தாலும், அதற்குப் பணஞ்செலுத்தினாலும், அதற்காகச் செலுத்தப்பட்ட பணத்தைப் பெற்றுக்கொண்டாலும், எவ்விதமாகவாவது கைமாறச்செய்தாலும்,

(*b*) தீர்வைக்குட்பட்ட வேறே யாதொரு ஆதாரவைக் கிரமமாய் முத்திரைபோடாமல் எவனாவது எழுதி முடித்தாலும் சாட்சியாகத்தவிர மற்றப்படி கையெழுத்துப் பண்ணினாலும்,

(*c*) கிரமமாய் முத்திரை போடாத யாதொரு அதிகாரப்பத்திரத்தைக்கொண்டு எவனாவது அபிப்பிராயங்கூறினாலும் அபிப்பிராயங்கூற எத்தனப்பட்டாலும்,

அப்படிப்பட்டவன் அவ்வித பிரதிகுற்றத்திற்காகவும் ஐந்நூறு ரூபாய்வரையில் அபராதத்திற்குள்ளாவான்:

ஆனால் யாதொரு ஆதாரவுக்காக 37, 42, அல்லது 63-வது பிரிவின்படி அபராதஞ்செலுத்தப்பட்டிருந்தால், அந்த அபராதத்தொகையை, அந்த அபராதஞ்செலுத்தினவனுக்கு அதே ஆதாரவுக்காக இந்தப்பிரிவின்படி பின்னிட்டு அபராதம் விதிக்கப்படுமாகில் அதில் கழித்துக்கொள்ளவிடவேண்டும்.

(2) கிரமமாய் முத்திரைக்கடிதாசியாயிராமல் யாதொரு பங்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டால், அதைப்பிறப்பிக்கிற கம்பேனியாரும் அது பிறப்பிக்கப்படுங்காலத்தில் அந்தக் கம்பேனியைச்சேர்ந்த காரியநிர்வாக டைரக்டராகவாவது ஸெக்ரட்டரியாகவாவது வேறே பிரதான உத்தியோகஸ்தராகவாவதிருக்கிற ஒவ்வொரு நபரும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதத்தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

பழைய முத்திரையை அழிக்காவிட்டால் தண்டனை.

66. பழைய முத்திரையை 13-வது பிரிவின்படி அழித்துவிடவேண்டியவன் அந்தப் பிரிவில் சொல்லியிருக்கிற விதமாய் அந்த முத்திரையை அழித்துவிடாதபட்சத்தில், அவனுக்கு 50-ரூபாய் வரையில் அபராதம் போடப்படும்.

29-வது பிரிவிலுள்ள ஏற்பாடுகளின்படி நடவாவிட்டால் தண்டனை.

67. கவர்ன்மெண்டை மோசஞ்செய்ய எண்ணங்கொண்டு எவனாவது,—

(a) யாதொரு ஆதாரவில் கண்டெழுதவேண்டுமென்று 29-வது பிரிவில் சொல்லியிருக்கிற சங்கதிகளையும் வயணங்களையும் எதார்த்தமாகப் பூர்த்தியாய்க் கண்டெழுதாமல் அந்த ஆதாரவை முடித்துக்கொடுத்தாலும்,

(b) யாதொரு ஆதாரவைத் தயார் செய்ய அமர்ந்தாவது சம்பந்தப்பட்டாவதிருந்து, அப்படிப்பட்ட சகல சங்கதிகளையும் வயணங்களையும் அதில் எதார்த்தமாகப் பூர்த்தியாய்க் கண்டெழுதாமலிருந்தாலும், விட்டுவிட்டாலும்,

(c) இந்த ரெகுலேஷன் படிக்கான யாதொரு தீர்வை அல்லது தண்டத்தொகையை நம்முடைய கவர்ன்மெண்ட இழப்பதற்கு ஏதுவான வேறே யாதொரு செய்கைச் செய்தாலும்,

அப்படிப்பட்டவன் ஓராயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவனுவான்.

ரசீது கொடுக்கமாட்டேனென்றாலும் ரசீதுகளுக்குண்டான தீர்வை செலுத்தாமல் தப்பித்துக்கொள்ளத்தக்கதாகச் செய்தாலும் தண்டனை.

68. எவனுவது,—

(a) 32—வது பிரிவின்படி ரசீது கொடுக்கவேண்டியதாயிருந்து, அதைக் கொடுக்கமாட்டேனென்றாலும், கொடுக்க அசட்டை பண்ணினுலும்,

(b) தொகையிலோ அல்லது விலையிலோ இருபது ரூபாய்க்கு மேற்பட்ட பணஞ்செலுத்தப்பட்ட பின்பாவது சொத்து ஒப்பிக்கப்பட்ட பின்பாவது தீர்வை செலுத்தாமல் நம்முடைய கவர்ன்மெண்டை மோசஞ்செய்ய எண்ணங்கொண்டு இருபது ரூபாய்க்கு மேற்படாத தொகைக்கு அல்லது விலைக்கு ரசீது கொடுத்தாலும், செலுத்தப்பட்ட பணத்தையாவது ஒப்பிக்கப்பட்ட சொத்தையாவது பிரித்தாலும் வகுத்தாலும்,

அப்படிப்பட்டவன் நூறு ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவனுவான்.

பாலிஸி எழுதிக்கொடாவிட்டாலும், கிரமமாய் முத்திரைபோட்டிராத பாலிஸியை எழுதிக்கொடுத்தாலும் தண்டனை.

69. எவனுவது,—

(a) யாதொரு இன்ஷூரன்ஸ் உடன்படிக்கைக்காக மேல்வாரி அல்லது ஜீவேந்தியை பெற்றுக்கொண்டாவது, வரவு வைத்துக்கொண்டாவது, அப்படிச் செய்தபின்பு ஒரு மாதத்திற்குள் அப்படிப்பட்ட இன்ஷூரன்ஸுக்காகக் கிரமமாய் முத்திரை போட்ட பாலிஸியை எழுதிப் பூர்த்தி செய்யாவிட்டாலும்,

(b) கிரமமாய் முத்திரை போடப்படாத பாலிஸியை எழுதினாலும் பூர்த்தி செய்தாலும் ஒப்பித்தாலும், அப்படிப்பட்ட பாலிஸியைக்குறித்துப் பணத்தைச் செலுத்தினுலும் கணக்கில் ஒப்புக்கொண்டாலும், செலுத்தவாவது கணக்கில் ஒப்புக்கொள்ளவாவது சம்மதித்தாலும்,

அப்படிப்பட்ட பிரதி நபரும் இருநூறு ரூபாய்வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவனுவான்.

ஜதைஜதையாயிருப்பதாகப்பொருள்படுகிற பில்லுகள் அல்லது கப்பல் பாலிஸிகள் எத்தனையோ அத்தனையும் எழுதாவிட்டால் தண்டனை.

70. ஒரு ஜதையானது இரண்டு அல்லது பலவாய் எழுதப்படுகிறதாகவாகிலும் பூர்த்தி செய்யப்படுகிறதாகவாகிலும் பொருள் படுகிற பில் ஆவ் எக்ஸ்சேஞ்ச் அல்லது கப்பல இன்ஷூரன்ஸ் பாலிஸியை எழுதுகிறவன் அல்லது பூர்த்தி செய்கிறவனெவனுவது அப்படிப்பட்ட பில் அல்லது பாலிஸியினுல் அந்த ஜதைக்கு எத்தனை இருப்பதாகத் தெரிய வருகிறதோ அத்தனை பில்லுகள் அல்லது பாலிஸிகளையும் கிரமமாய் முத்திரை போடப்பட்ட கடுதாசியில் அதேகாலத்திலே எழுதாவிட்டாலும் பூர்த்தி செய்யாவிட்டாலும், அப்படிப்பட்டவன் ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவனுவான்.

பில்லுகளில் பிந்திய தேதி போடுவதற்காகவும் தீர்வைசெலுத்தாமல் மோசஞ்செய்வதற்காக இதர உபாயங்களைச் செய்வதற்கவும் தண்டனை.

71. எவனுவது,—

(a) தீர்வை செலுத்தாமல் நம்முடைய கவர்ன்மெண்டை மோசஞ்செய்ய எண்ணங்கொண்டு, பில் ஆவ் எக்ஸ்சேஞ்சாவது ப்ராமிஸொரி நோட்டாவது வாஸ்தவமாய் எழுதப்பட்ட அல்லது செய்யப்பட்ட தேதிக்குப் பின்னிட்ட தேதியுள்ள அந்த பில் அல்லது நோட்டை எழுதினுலும், செய்தாலும், பிறப்பித்தாலும்,

(b) அந்த பில் அல்லது நோட்டுக்கு அப்படி பிந்தின தேதி போட்டிருக்கிறதென்று அறிந்திருந்து எவனுவது அதை எண்டார்ஸ் பண்ணினுலும், டிரான்ஸ்பர் செய்தாலும், அங்கீகரிக்கும்படியாவது பணஞ்செலுத்தச்சொல்லியாவது கொண்டுவந்து கொடுத்தாலும், அதை அங்கீகரித்தாலும், அதற்குப்பணஞ் செலுத்தினுலும் பணம் பெற்றுக்கொண்டாலும், எவ்விதமாகவாவது கைமாறச் செய்தாலும்.

(c) அவ்வித எண்ணங்கொண்டு எவனாவது இந்த ரெகுலேஷனிலாகிலும் அந்த காலத்தில் வழங்கிவருகிற வேறே யாதொரு சட்டதிட்டத்திலாகிலும் எடுத்துச்சொல்லியிராத யாதொரு செய்கையையாவது தந்திரத்தையாவது உபாயத்தையாவது செய்தாலும், அதில் சம்பந்தப்பட்டிருந்தாலும்,

அப்படிப்பட்டவன் ஆயிரம் ரூபாய்வரையில் அபராதம் விதிக்கப்படத்தக்கவனாவான்.

முத்திரைக்கடுதாசி விற்பனையைக்குறித்த விதியை மீறுவதற்காகவும் அதிகாரமில்லாமல் விற்பனைசெய்வதற்காகவும் தண்டனை

72. (a) முத்திரைகளை விற்பதற்கு நியமிக்கப்பட்டவனெவனாவது 78-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு விதியை மீறி நடந்தாலும்,

(b) அப்படி நியமிக்கப்படாதவனெவனாவது ஒரு அணா பசைமுத்திரையல்லாத வேறே யாதொரு முத்திரையை விற்றாலும் விற்கக் காட்டினாலும்,

அப்படிப்பட்டவன் ஆறு மாதத்திற்கதிகப்படாமல் காவலில் வைக்கப்படுவதற்குள்ளாவான், அல்லது ஐந்நூறு ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவான், அல்லது இரண்டு தண்டனைக்கும் உள்ளாவான்.

பிராதுகளைத் தொடருவதும் நடத்துவதும் ...

73. (1) இந்த ரெகுலேஷன்படிக்காவது இதனால் ரத்து செய்யப்பட்ட யாதொரு ரெகுலேஷன்படிக்காவது தண்டிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தைக்குறித்து டிவிஷன்பேஷ்காருடைய அனுமதி இல்லாமலாகிலும், திவான் நம்முடைய அனுமதியுடன் சாதாரணமாகவோ பிரத்தியேகமாகவோ இது விஷயத்தில் அதிகாரம் கொடுக்கப்பெறுகிற வேறே உத்தியோகஸ்தருடைய அனுமதியில்லாமலாகிலும் யாதொரு பிராதும் தொடரக்கூடாது.

(2) திவானாவது, இது விஷயத்தில் திவானால் பொதுவாகவாகிலும் பிரத்தியேகமாகவாகிலும் அதிகாரங் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தனாவது அப்படிப்பட்ட யாதொரு பிராதை நிறுத்திவைக்கலாம், அல்லது அப்படிப்பட்ட யாதொரு குற்றத்திற்கு ராஜி செய்துவிடலாம்.

(3) அவ்வாறு ராஜி செய்யப்பட்ட தொகையானது 50 வது பிரிவில் ஏற்படுத்தியிருக்கிற விதமாக வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

மஜிஸ்ட்ரேட்டுகளுடைய அதிகார வரம்பு.

74. இந்த ரெகுலேஷனுக்குட்பட்ட யாதொரு குற்றத்தை, இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டின் அதிகாரத்திற்குக் குறையாத அதிகாரமுள்ள மாஜிஸ்திரேட்டை தவிர வேறே எந்த மாஜிஸ்திரேட்டும் பரிசீலனை செய்யக்கூடாது.

பரிசீலனை இடம்

75. யாதொரு ஆதாரவு சம்பந்தமாய்ச் செய்யப்பட்ட அவ்வித பிரதிகுற்றத்தையும் அந்த ஆதாரவு எவ்விடத்தில் கண்டுபிடிக்கப்படுகிறதோ அந்த இடந்திலோ அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற க்ரிமினல் ப்ரொஸீடுவர் கோடின்படி அப்படிப்பட்ட குற்றம் பரிசீலனை செய்யப்படத்தக்க பரிசீலனை செய்யலாம்.

76. இவ்வத்தியாயத்தின்படி போடப்படுகின்ற எல்லா அபராதங்கட்கும் க்ரிமினல் ப்ரொஸீடுவர் கோடிலுள்ள நிபந்தனைகள் சம்பந்தப்படும்:

8-ம் அத்தியாயம்.

அனுபந்தமான நிபந்தனைகள்.

புஸ்தகம் முதலியவைகளை பார்வையிடும்படி வைத்திருக்கவேண்டுமென்பது.

77. எவைகளைப் பார்வையிடுவதினால் யாதொரு தீர்வை கிடைப்பதற்காவது, யாதொரு தீர்வை சம்பந்தமாக யாதொரு மோசம் அல்லது தவிர்தலை ருஜுப்படுத்துவதற்காவது கண்டுபிடிப்பதற்காவது ஏதுவியமுண்டாகலாமோ அப்படிப்பட்ட எவ்வகையான ரெஜிஸ்டர்கள், புஸ்தகங்கள், ரெகார்டுகள், காகிதங்கள், தஸ்தவேஜுகள் அல்லது நடவடிக்கைகளைத் தம்முடைய ஸ்வாதீனத்திலுடைய ஒவ்வொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தனும் டிவிஷன் பேஷ்காரால் கையெழுத்து மூலமாய் அனுமதி கொடுக்கப்பெற்ற எவனையாவது அந்த விஷயத்திற்காக அந்த ரெஜிஸ்டர்களையும் புஸ்தகங்களையும் காகிதங்களையும் தஸ்தவேஜுகளையும் நடவடிக்கைகளையும் கட்டணம் அல்லது வர்த்தனையில்லாமலே நியாயமான எல்லாக்காலங்களிலும் பார்வையிடவும், அவனுக்கு அவசியமாகத் தோற்றுகிற குறிப்புகளையும் எக்ஸ்ட்ராக்டுகளையும் எடுத்துக்கொள்ளவும் அனுமதி கொடுக்கவேண்டும்.

முத்திரைக்கடுதாசி விற்பனையைக்குறித்த விதிகள் செய்ய அதிகாரம்.

78. திவான் நம்முடைய அனுமதியுடன்,

(a) முத்திரைகள், முத்திரைகடுதாசிகள், ஆகிய இவைகளின் சப்பிளையையும் விற்பனையையும்,

(b) இன்னார் மாத்திரம் விற்கவேண்டுமென்பதையும்,

(c) அவர்களுடைய அலுவலையும் பிரதிபலனையும், கிரமப்படுத்துவதற்காக விதிகளை செய்யலாம்:

ஆனால், ஒரு அணா பகை முத்திரைகளின் விற்பனை அப்படிப்பட்ட விதிகளால் வரையறுக்கப்படமாட்டாது.

சாதாரணமாய் ரெகுலேஷனை நிறைவேற்றுவதற்கு விதிகள் செய்ய அதிகாரம்.

79. கவர்ன்மெண்டுடைய அனுமதியுடன் இந்த ஆக்ட்டில் சொல்லியிருக்கிற காரியங்களை சாதாரணமாய் நிறைவேற்றுவதற்குரிய விதிகளை செய்யலாம்; மேலும், அந்த விதிகளை மீறினால் எந்த விஷயத்திலும் ஐந்நூறு ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதம் கொடுக்கவேண்டுமென்று விதிகளைக்கொண்டு நிர்ணயிக்கலாம்.

விதிகளைப் பிரசுரஞ் செய்வது.

80. (1) இந்த ரெகுலேஷன்படி செய்யப்பட்ட விதிகளெல்லாம் கவர்ன்மெண்டு கெஜெட்டில் பிரசுரஞ் செய்யவேண்டும்.

(2) இந்தப் பிரிவில் சொல்லியிருக்கிறபடி பிரசுரஞ் செய்யப்பட்ட சகல விதிகளும் அப்படி பிரசுரமான பின்பு இந்த ரெகுலேஷனால் ஏற்படுத்தப்பட்டவைகளைப்போல் செலாவணியாகும்.

கோர்ட் கட்டளைகளுக்குப் பாதகமில்லை.

81. கோர்ட் கட்டளைகளை குறித்து அந்தந்த காலத்தில் அமலிலிருந்த ஸ்டாம்ப் ரெகுலேஷன்படிக்குண்டான நிலைவைகளுக்கு இந்த ரெகுலேஷனிலுள்ளதொன்றும் பாதகமுண்டாவதாக எண்ணக்கூடாது.

ரெகுலேஷனை மொழிபெயர்த்து, விலைக்கு விற்பது.

82. இந்த ரெகுலேஷனை மலயாளத்திலும் தமிழிலும் கவனித்து மொழிபெயர்க்கவும், மொழிபெயர்ப்பை அச்சிட்டு ஒவ்வொரு பிரதிக்கு நாலணாவுக்கு அதிகமன்றியுள்ள விலைக்கு விற்கவுஞ் செய்யவேண்டும்.

ஷெட்யூல்.

ஆதாரவுகளுக்கு முத்திரைத்தீர்வை.

இந்த ஷெட்யூல் சமபந்தமான காரியங்கட்கு ஒரு ரூபாய் என்றால் 28 சல்லிக்குச் சரியாகும்.

எட்டணா	,,	14	,,
நாலணா	,,	7	,,
இரண்டணா	,,	$3\frac{1}{2}$	,,
ஓரணா	,,	$1\frac{3}{4}$	,,

சரியாகும்.

இனை ஆதாரவுகள்	சரியான முத்திரைதீர்வை.
1. கடனை ஒப்புக்கொள்வது, தொகையிலாவது விலையிலாவது இருபது ரூபாய்க்கு மேற்பட்ட கடனைக் குறித்ததாக [illegible] (பாத்தியதாரனுடைய [illegible]) [illegible] அல்லது எழுதின கடன் பேர் [illegible] வைக்கப்பட்டிருந்தால், ஆனால் அவ்வாறு ஒப்புக்கொள்வதிலே, கடனைக் கொடுத்தவர் [illegible] யாதொரு [illegible] அல்லது யாதொரு சரக்கு அல்லது சொத்தை ஒப்பிப்பதாக யாதொரு நிபந்தனையாவது இருக்கக்கூடாது	ஒரு அணா.
2. அட்மினிஸ்ட்ரேஷன் பாண்ட்,	
(a) தொகை 1,000 ரூபாய்க்கு அதிகப்படாத விஷயத்தில் ...	அவ்வளவு தொகைக்கு (நம்பர் 14) கடப பத்திரத்திற்குண்டான தீர்வை
(b) இதரமான யாதொரு விஷயத்தில்	ஐந்து ரூபாய்.
3. ஸ்வீகாரபத்திரம், அதாவது யாதொரு ஸ்வீகாரத்தை ரெக்கார்ட் செய்கிற அல்லது ஸ்வீகாரஞ்செய்வதற்கான அதிகாரங்கொடுக்கிற அல்லது கொடுப்பதாகப் பொருள்படுகிற (உயிலல்லாத) வேறே யாதொரு ஆதாரவு	அடியறை கொடுக்கத்தக்கதல்லாவிட்டால் பத்து ரூபாய்.
4. பிரமாணப்பத்திரிகை, பிரமாணஞ் செய்வதற்குப் பதிலாக உறுதிமொழி சொல்லவாவது உறுதிமொழிப் பத்திரிகை எழுதிக் கொடுக்கவாவது சட்டத்தினாலே அதிகாரங் கொடுக்கப்பெற்ற நபர்களின் விஷயத்தில் உறுதிமொழியாகிலும் எழுதிக்கொடுத்த உறுதிமொழிப் பத்திரிகையாகிலும் அடங்கியிருப்பது	ஒரு ரூபாய்.
நிவாரணைகள்.	
பிரமாண பத்திரிகை அல்லது உறுதிமொழிப் பத்திரிகை—	
(a) பட்டாளத்திலோ துருப்பிலோ சேருவதாய உடன்படிக்கையாக;	
(b) யாதொரு கோர்ட்டிலாவது யாதொரு கோர்ட் உத்தியோகஸ்தனுக்கு முன்பாகவாவது நேராய்த் தாக்கல் செய்வதற்காக அல்லது உபயோகிப்பதற்காக;	
(c) பென்ஷனையாவது தருமவர்த்தனையையாவது எவரேயாகிலும் பெறுக்கொள்ளும்படிக்கு மாத்திரமே செய்வதற்காக, எழுதப்பட்டால்	
5. உடன்படிக்கை அல்லது உடன்படிக்கை யாதாவது.	
(a) யாதொரு கவர்ன்மென்ட் பத்திரம் அல்லது யாதொரு சட்டப்படி ஏற்பட்ட கம்பெனியில் அல்லது இதரமான ஒன்று சேர்ந்த கூட்டத்திலுள்ள பங்கு அல்லது பில் ஆவ் எக்ஸ்சேஞ்சின் விற்பனையைக் குறித்ததானால்	ஒரு அணா
(b) மற்றப்படி சொல்லியிராததானால்	எட்டு அணா.

இனம் சாசனம்	சரியான முத்திரைக் கட்டணம்.
விவரங்கள். [illegible] (a) [illegible] 13 [illegible] (b) [illegible]	
குத்தகை அல்லது [illegible] (35-ம் நம்பர்) [illegible]	
6. ஆட்சேபப் பிரமாணங்களின் [illegible] (1) [illegible] (2) [illegible]	
[illegible] (a) [illegible]	[illegible] [12 (b)-ம் நம்பர்] [illegible]
(b) [illegible]	[illegible] [12 (b)-ம் நம்பர்] [illegible]
விவரங்கள். [illegible]	
7. அதிகாரத்தை [illegible]	[illegible] ரூபாய்
8. [illegible] (a) [illegible] 1,000 [illegible]	[illegible] (நம்பர் 14) [illegible]
(b) [illegible]	[illegible] ரூபாய்.
விவரங்கள். (a) [illegible] (b) [illegible]	
9. [illegible]	[illegible] ரூபாய்
10. ஒரு கம்பெனியினுடைய சங்கத்து விதிகள்	இருபத்தைந்து ரூபாய்.
விவரங்கள். [illegible] (1882-ம் [illegible]) 1063-[illegible] 23 [illegible] (80-ம் நம்பர்) [illegible]	

இன்ன ஆதாரம்	குறிப்புரை (Remarks)

சாட்டு[illegible] அதிகாரம், (23 வது நம்பர்) [illegible] (62 வது நம்பர்) [illegible] (63 வது நம்பர்) [illegible]

ஆட்டர்வலி, (48 வது நம்பர்) [illegible]

[illegible] அதிகாரம், (3 வது நம்பர்) [illegible]

11. பஞ்சாயத்துத் தீர்மானம், [illegible]

(a) [illegible] — [illegible] (நம்பர் 14) [illegible]

(b) [illegible]

[illegible]

[illegible]

12. [illegible] 3 (2) வது (3) வது [illegible]

(a) [illegible] — [illegible]

(b) [illegible]

[illegible]	ரூ. அ. பை.			ரூ. அ. பை.			ரூ. அ. பை.		
[illegible] 200 ரூபாய்க்கு [illegible]									
ரூ. 200 க்கு மேற்பட்டு ரூ. 400 வரையில்	0	2	0	0	1	0	0	1	0
400 [illegible] 600	0	4	0	0	2	0	0	2	0
600 [illegible] 1,000	0	6	0	0	3	0	0	2	0
1,000 [illegible] 1,200	0	10	0	0	5	0	0	4	0
1,200 [illegible] 1,600	0	12	0	0	6	0	0	4	0
1,600 [illegible] 2,500	1	0	0	0	8	0	0	6	0
2,500 [illegible] 5,000	1	8	0	0	12	0	0	8	0
5,000 [illegible] 7,500	3	0	0	1	8	0	1	0	0
7,500 [illegible] 10,000	4	8	0	2	4	0	1	8	0
10,000 [illegible] 15,000	6	0	0	3	0	0	2	0	0
15,000 [illegible] 20,000	9	0	0	4	8	0	3	0	0
20,000 [illegible] 25,000	12	0	0	6	0	0	4	0	0
25,000 [illegible] 30,000	15	0	0	7	8	0	5	0	0
30,000 [illegible]	18	0	0	9	0	0	6	0	0
[illegible] 10,000 ரூபாய்க்கு [illegible]	6	0	0	3	0	0	2	0	6

(c) [illegible] — [illegible] (நம்பர் 14) [illegible]

13. [illegible] — [illegible]

பத்திரங்கள்	உரிய முத்திரைத் தீர்வை
விலக்குகள்.	
(a) [illegible]	
(b) [illegible]	
14. பாண்ட், (கடன்பத்திரம்) [3(5) வது பிரிவில் வரையறுக்கப்பட்ட பிரகாரம்] (27 வது நம்பர்) [illegible] இந்த செருகேதுவிலுள்ள [illegible] விதமாய் சொல்லியிராதவை —	
அடைப்பட்ட தொகை அல்லது மதிப்பு ரூபாய் 25க்கு மேற்படாத விஷயத்தில் ...	இரண்டு அணா
அடைப்பட்ட தொகை அல்லது மதிப்பு ரூபாய் 25க்கு மேற்பட்டு ரூபாய் 50 வரையில் ...	நான்கு அணா
,, 50 ,, 100	எட்டு அணா
,, 100 ,, 20	ஒரு ரூபாய்
,, 200 ,, 30'	ஒரு ரூபாய் எட்டு அணா
,, 300 ,, 400	இரண்டு ரூபாய்
4..0 ,, 500	இரண்டு ரூபாய் எட்டு அணா
500 ,, 600	மூன்று ரூபாய்
600 ,, 700	மூன்று ரூபாய் எட்டு அணா
700 ,, 800	நான்கு ரூபாய்
800 ,, 900	நான்கு ரூபாய் எட்டு அணா
900 ,, 1,000	ஐந்து ரூபாய்
ரூபாய் 1,000க்கு மேற்பட்டால் ஒவ்வொரு 500 ரூபாய்க்கும் அல்லது அதன் பாகத்துக்கும் ...	இரண்டு ரூபாய் எட்டு அணா.
([illegible] நம்பர்) அடமானப்பத்திரத்தையும் (15 வது நம்பர்) [illegible] (26-வது நம்பர்) [illegible] (34-வது நம்பர்) [illegible] (46-வது நம்பர்) [illegible] (57-வது நம்பர்) [illegible]	
விலக்கு.	
[illegible]	
15. பாட்டம்ரி பாண்ட் [illegible] ...	(14—வது நம்பர்) பாண்டுக்கு [illegible]
16. கான்சலேஷன் என்றும் ரத்து ஆதாரம் (பத்திரம்)— [illegible] ...	[illegible]
(55-வது நம்பர்) [illegible] (63B [illegible]) [illegible] (61-வது நம்பர்) [illegible] (64B-வது நம்பர்) [illegible]	
17. [illegible] — [illegible] —	
(a) [illegible] 10 [illegible] ...	[illegible] அணா.
(b) [illegible] 10 [illegible] 25 [illegible] ...	[illegible] அணா

[illegible]	[illegible]
(c) [illegible]	[illegible] ஒப்படைப்பத்திரத் [illegible]
18. [illegible] (scrip) [illegible]	ஒரு அணா.
(36-வது நம்பர்) [illegible]	
19. சார்ட்டர்பார்டி, [illegible]	ஒரு ரூபாய்
20. செக், [3 (7) பிரிவிலுள் விவரிக்கப்பட்டபிரகாரம்] ...	ஒரு அணா
21. சீட்டு அல்லது குடிவாரி [illegible] 100 ரூபாயில் [illegible]	ஒரு ரூபாய்.
22. காம்பொஸிஷன் [illegible]	ஐந்து ரூபாய்
23. ஒப்படைபத்திரம்—[3 (8) பிரிவிலுள் விவரிக்கப்பட்ட பிரகாரம்] [illegible]—	
அப்படிப்பட்ட ஒப்படைப்பத்திரத்தால் [illegible] 50 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்,	எட்டு அணா.
ரூபாய் 50-க்கு மேற்பட்டு ரூபாய் 100 வரையில் ...	ஒரு ரூபாய்.
,, 100 ,, 200 ,, ...	இரண்டு ரூபாய்.
,, 200 ,, 300 ,,	மூன்று ரூபாய்
,, 300 ,, 400 ,,	நான்கு ரூபாய்.
,, 400 ,, 500 ,,	ஐந்து ரூபாய்
,, 500 ,, 600 ,,	ஆறு ரூபாய்.
,, 600 ,, 700 ,,	ஏழு ரூபாய்.
,, 700 ,, 800 ,, ...	எட்டு ரூபாய்.
,, 800 ,, 900 ,, ..	ஒன்பது ரூபாய்.
,, 900 ,, 1,000 ,, ...	பத்து ரூபாய்.
ரூபாய் 1,000 க்கு மேற்பட்டு பிரதி 500 ரூபாய்க்கு [illegible]	ஐந்து ரூபாய்.
விவாரணை.	
1039 [illegible] 2 [illegible] 2 [illegible]	
கூட்டுப்பங்குப் பத்திரம்—46வது நம்பர் [illegible]	
24. நகல் அல்லது எக்ஸ்ட்ராக்ட்—[illegible]	
(i) [illegible]	எட்டு அணா
(ii) வேறு எந்த விஷயத்தில் ..	ஒரு ரூபாய்

இன்ன ஆதாரவுகள்	சரியான முத்திரைத்தீர்வை
விவரணை.	
யாதொரு பத்திரிகைக்கு அரசாங்க உத்தியோகஸ்தன் யாதொரு அரசாங்க ஆபீஸில் இருக்கிறதாகவும் யாதொரு அரசாங்க காரியத்திற்காகவும் சட்டப்படி வெளிப்படையாய் எழுதவாகிலும் சோதிக்கவாகிலும் வேண்டியிருக்கிற நகல்.	
25. எதிரிடை அல்லது இரண்டாம் பிரதி.—தீர்வைக்குட்பட்டதாயிருந்து சரியான தீர்வை செலுத்தப்பட்டிருக்கிற யாதொரு ஆதாரவுக்கு எதிரிடை அல்லது இரண்டாம் பிரதி—	
(a) அசலாதாரவுக்குண்டான தீர்வை ஒரு ரூபாய்க்கு மேற்படாவிட்டால் ...	அசலுக்குண்டான தீர்வை
(b) வேறே யாதொரு விஷயத்தில் ...	ஒரு ரூபாய்
விவரணை.	
அரும்படிக்காரனுக்குக் கொடுக்கப்பட்ட யாதொரு பட்டாவிட்டாவது தீர்வையிலிருந்தும் விலக்கு செய்யப்பட்டால் அதற்குண்டான எதிரிடை.	
26. கஸ்டம்ஸ் பாண்ட்—	
(a) தொகை 1,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்	அத்தனை தொகைக்கு (14ம் நம்பர்) கடன் பத்திரத்துக்குண்டான தீர்வை
(b) வேறே யாதொரு விஷயத்தில் ...	ஐந்து ரூபாய்
27. டிபெஞ்சர், (கொலை டிபெஞ்சராக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி) ஒப்படையானாலும் எண்டார்ஸ்மெண்டினாலும் பிரத்தியேகமான டிரான்ஸ்பர் ஆதாரவாலாவது டிரான்ஸ்பர் செய்யத்தக்கதாய் இருக்கத்தக்க பத்திரமாகும் ...	அதே தொகைக்கு (நம்பர் 14) கடன்பத்திரத்துக்குண்டான தீர்வை
விவரணம்—டிபெஞ்சர் என்கிற வார்த்தையின் அர்த்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கிற எவ்வித வட்டி கூப்பனும் அடங்கும்; ஆனால் தீர்வையை மதிக்கும்போது அந்த கூப்பன்களின் தொகையைச் சேர்க்கக்கூடாது.	
விவரணை.	
கடன்வாங்கும் யாதொரு சட்டப்படி ஏற்பட்ட கம்பெனியாவது ஒருபங்கு சேர்ந்த வேறே கூட்டத்தாராவது டிபெஞ்சர் வைத்துக் கொண்டிருக்கிறவர்களுடைய அநுகூலத்தின் பொருட்டு [illegible] தங்கள் சொத்தை முழுமையுமாவது [illegible] எந்த பத்திரத்தின் ஆதாரத்தால் டிபெஞ்சர்கள் பிறப்பிக்கப்பட்டனவோ அந்த டிபெஞ்சர்களின் பூர்ணமான தொகையின் [illegible] தக்கபடி முத்திரையிடப்பட்டு, [illegible] கொடுக்கப்பத்திரத்தின் நிபந்தனைகளை அநுசரித்து அந்தக் கம்பெனியாலாவது கூட்டத்தாராலாவது பிறப்பிக்கப்பட்ட டிபெஞ்சர் ஆனால் அப்படி பிறப்பிக்கப்பட்ட டிபெஞ்சர்கள் மேலெழுதின தொகையைப் பத்திரத்தின் ஷரத்தை அநுசரித்து பிறப்பிக்கப்பட்டதாகச் செய்யவேண்டும்.	
(14வது நம்பர்) பாண்டையும், 57 வது தீர்வையும் பார்க்க.	
யாதொரு டிரஸ்ட் உறுதிமொழிப்பத்திரிகை.—(64வது நம்பர்) டிரஸ்டைப் பார்க்க.	
28. சரக்கை ஒப்புவித்துக்கொள்ளுவதற்கான உத்தரவு [illegible] ...	[illegible] அணா
[illegible]	
[illegible] —31 [illegible] பார்க்க.	

இன்ன ஆதரவுகள்	சரியான முத்திரைத்தீர்வை
29. விவாகப் பிரிவினை ஆதரவு—அதாவது எவருமேனும் தன் விவாகப் பிரிவினையை உண்டுபண்ணுகிற ஆதரவு	ஒரு ரூபாய்
ஸ்திரீதன ஆதரவு—(58 வது நம்பர்) பொருத்தம் என்பதைப் பார்க்க.	
இரண்டாம் பிரதி—(25 வது நம்பர்) எதிரிடையைப் பார்க்க.	
30. யாதொரு ஹைகோர்ட், டிஸ்டிரிக்ட் கோர்ட், முன்ஸிப் கோர்ட், அல்லது மாஜிஸ்டிரேட் கோர்ட், இவையின் ரோலிலே வக்கீலாகத் தாக்கல்.	
(a) ஹைகோர்ட்	இருநூறு ரூபாய்
(b) டிஸ்டிரிக்ட் கோர்ட்	நூறு ரூபாய்
(c) முன்ஸிப்கோர்ட்	ஐம்பது ரூபாய்
(d) டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் கோர்டும் அதற்குக் கீழான கோர்ட்களும்	ஐம்பது ரூபாய்
(e) கீழ் மாஜிஸ்டிரேட் கோர்டு	பத்து ரூபாய்
31. சொத்துப்பரிவர்த்தனை ஆதரவு	அந்த ஆதரவில் கண்டிருக்கிறபடி மிகவும் அதிகபெறுமானமுள்ள சொத்தின் விலைக்குச் சரியான ஐவேஜுக்காக (23 வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்திற்குண்டான தீர்வை
எக்ஸ்டிராக்ட்—(24 வது நம்பர்) நகலைப்பார்க்க	
32. உடன் சேர்க்கையான பொறுப்பு ஆதரவு அதாவது கொதுவை சொத்தின்மேலே உடன்சேர்க்கையான பொறுப்பைச் சுமத்துகிற யாதொரு ஆதரவு—	
(a) ஆதி கொதுவையானது 40-வது நம்பர் (a) பகுதியில் சொல்லியிருக்கிற வகையானதாயிருந்தால் (அதாவது, சுவாதீனத்துடன்)	அந்த ஆதரவினால் ஏற்பட்ட உடன்சேர்க்கையான பொறுப்பின் தொகைக்குச்சரியான ஐவேஜுக்காக (23 வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை.
(b) அப்படிப்பட்ட கொதுவை—40-வது நம்பர் (b) பகுதியில் கண்டிருக்கிற வகையானதாயிருந்தால் (அதாவது சுவாதீனமில்லாமல்)—	
